### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

# முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளை நெல்லை கிழக்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! இரா.ஆவுடையப்பன் வரவேற்புரை!

நெல்லை,மே.20-

நெல்லை கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் ரவுண்டானா அருகில் உள்ள ஹோட்டல் காப்பர் லீப் கூட்ட அரங்கில் வைத்து 18.05.2025 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.

நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் வரவேற்புரை ஆற்றினார்.இந்நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று சிறப்புரை யாற்றினார்.

நிகழ்வுக்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நெல்லை முன்னாள் எம். பி. சா.ஞானதிரவியம், ஆ.பிரபாகரன், பிரபாகரன், சித்திக், தொகுதி பார்வையாளர்கள் அம்பை என். ஜோசப்ராஜ்,இராதாபுரம் எம்.சிவராஜ், மாநில நிர்வாகிகள்: இராஜம்ஜான், ஆவின்ஆறுமுகம், கே. கணேஷ்குமார்ஆதித்தன், எரிக் ஜூடு, மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணை செயலாளர் கள் நம்பி,மைக்கேல்,தமயந்தி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம். பி அவர்கள் கழக நிர்வாகிகளிடம் கருத்துக்களை கேட்டு அறிந்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசந்திரன், கணேசன்,எட்வின் வளவன்அரசு, பரமசிவ அய்யப்பன்,சாந்தி சுபாஷ், கனகராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.சிவனு பாண்டியன் (எ) பரணிசேகர்,முத்து பாண்டி (எ) பிரபு, கண்ணன், போர்வெல் கணேசன், சுடலைக்கண்ணு, ஆரோக்கிய எட்வின், செல்வகருணாநிதி, ராஜன், சேவியர்ராஜா, ஜோசப்பெல்சி, ஜெகதீஸ், நகர கழக செயலாளர்கள் கணேசன், சுப்பிரமணியன் (எ) மணிசூரியன்,பேரூர் கழக செயலாளர்கள் முத்து கணேசன், இசக்கிபாண்டி, சுப்பையா, மணிஷா செல்வராஜ், சிந்தாமதார், மணிகண்டன், டி.வானுவாமலை, எம்.எம்.வானுவாமலை, முருகையா பாண்டியன், அயூப்கான்,கசமுத்து, ஜான்கென்னடி,சேதுராமலிங்கம், தமிழ்வாணன், அணி அமைப்பாளர்கள் ஜான் ராபிந்தர், செல்வ சூடாமணி, மல்லிகா அருள், ஆண்டனி பிரேமா, பிரேம் ஆனந்த், மாடசாமி, ராஜ சங்கரலிங்கம், சுப்பிரமணியன் (எ) நெல்லை மணி, நெடுஞ்செழியன், கார்த்திக்குமார், அருணன், ரஹ்மான், திருப்பதி ஜெயசீலன், பிராகாஷ், முருகன் பீர்மைதீன், தவசி மணிகண்டன், சகாயபிரபு, முருகன், அணி துணை அமைப்பாளர்கள் வேல்முருகன், மனோஜ்குமார், ஆகாஷ், தில்லை ராஜா, அருள் ராஜ் டார்வின் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் எனப் பதவியேற்பு உறுதிமொழி ஏற்று, இந்த மே மாதம் 7ஆம் நாளுடன் நான்காண்டுகள் நிறைவடைந்து, இன்று ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நமது திராவிட மாடல் அரசு,நம்பிக்கை வைத்து ஆட்சியை ஒப்படைத்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்குமான திட்டங்களை வழங்கிடும் நல்லாட்சியை வழங்கி வருகிறது.

“வாக்களித்த மக்களுக்கு மட்டுமின்றி,வாக்களிக்காத மக்களும் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே! என்று நினைக்கக் கூடிய அளவிலான ஆட்சியை வழங்கி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் உழைப்பு உழைப்பு உழைப்பு என பாராட்டு பெற்ற நம் தலைவர் அவர்கள். இன்று கலைஞர் அவர்கள் இருந்திருந்தால் நம் தலைவர் அவர்களைப் பற்றி சாதனைகள்!!! சாதனைகள்!!! சாதனைகள்!!! என்று சொல்லுகின்ற அளவிற்கு பாராட்டியிருப்பார்கள். ஆகவே நல்லாட்சி நடத்தி வருகின்ற நம் திராவிடமாடல் ஆட்சியின் முதலமைச்சர் அவர்களை இக்கூட்டம் பாராட்டி வணங்கி போற்றி மகிழ்கிறது.திராவிட மாடல் அரசு, ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இலட்சியத்துடனான அனைவருக்கு மான அரசாகத் திகழ்கிறது.

இந்தியாவின் பிற மாநிலங்களும் - கொள்கை ரீதியாக நமக்கு என்றும் எதிரானவர்கள் ஆள்கின்ற மாநிலங்களும் கூட திராவிட மாடல் அரசின் திட்டங்களைப் பின்பற்றும் வகையில் முன்னோடியான அரசாக முதன்மையான அரசாகத் தமிழ்நாட்டை இந்த நான்காண்டுகளில் உயர்த்தி உள்ளார்கள். ஒன்றிய அரசின் பூச்சாண்டிகளுக்கு மிரள்வதற்கு அடிமைக் கட்சியல்ல, நம் தி.மு.க. இது சுயமரியாதை இயக்கம். தன்மானமும், தைரியமும் கொண்ட இயக்கம். தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கும் இயக்கம்.இந்தியாவுக்கு வழிகாட்டும் இயக்கம் என சூழுரைத்து திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகின்ற முதலமைச்சர் அவர்களை இக்கூட்டம் பாராட்டி வாழ்த்தி வணங்கி மகிழ்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மகளிர், முதியோர், பள்ளி, கல்லூரிகளில் பயிலும், மாணவ, மாணவியர், இளைஞர்களுக்கு நாளும் நலத்திட்டங்களை தந்து நடத்தி வந்த கலைஞர் பிறந்தநாள் ஜூன் 3ஆம் தேதி ஆகும்.டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும், இனிப்புகள் வழங்கியும் ஏழை, எளிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மகளிர்,முதியோர், பள்ளி, கல்லூரிகளில் பயிலும், மாணவ, மாணவியர், இளைஞர்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்டங்கள் வழங்கி,பிறந்த நாள் நிகழ்ச்சிகளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும்.

மேலும் அதனை தொடர்ந்து ஜூன் மாதம் முழுவதும் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்டங்கள் வழங்கி, பொதுக்கூட்டங்கள்,தெருமுனை பிரச்சாரங்கள் நடத்துவது.

இந்நிகழ்ச்சிகளில் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் சார்பு அணிகளின் சார்பில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்திட வேண்டும். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை மிகச் சிறப்பாக, மிகுந்த எழுச்சியோடும் கொண்டாட இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

கழக துணைப் பொதுச் செயலாளர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புதல்வியும் முத்தான ஆட்சி நடத்தும் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் தலைவர் தளபதியாரின் சகோதரியுமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் நம் தலைவர் தளபதியாரின் எண்ணங்களை நடைமுறைபடுத்திட சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு கழகத்தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக, அவருடைய எண்ணங்களை நிறைவேற்றிடும் வகையில் நெல்லைகிழக்கு மாவட்டத்திற்கு ஆலோசனைகளை வழங்கி வழிநடத்த வருகை தந்துள்ள அவர்களை இக்கூட்டம் பாராட்டி வாழ்த்தி, போற்றி மகிழ்கிறது, மேலும் தலைவர் எண்ணங்களை நடைமுறைப்படுத்திட நாளும் உழைத்து கழகத் தலைவர் அவர்களிடம் 2026 தேர்தல் வெற்றியை சமர்த்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

நெல்லை மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக இருந்து கழகப்பணிகளை விரைவுபடுத்தவும், மாவட்ட கழகத்திற்கு உறுதுணையாகவும் இருந்து செயல்பட்டுவரும் கழக முதன்மை செயலாளரும், நகர்புற வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் வாழ்த்துக்களோடு கழகத் துணைப் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா அவர்களை இக்கூட்டம் வாழ்த்தி மகிழ்கிறது.அவருடைய கழகப் பணி சிறக்க இக்கூட்டம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், தெரிவித்துக் கொள்கிறது.

### வாக்குறுதிகள் நிறைவேற்றம்!

முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய உழைப்பினால் தொழில்துறையில் தமிழ்நாடு முதல் மாநிலமாகவும், பொருளாதார ரீதியாக அதிவேக முன்னேற்றமும்,கல்வியில் இந்தியாவில் முதன்மை மாநிலமாகவும் தமிழ்நாட்டின் முன்னேற்றம் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சியே மக்களின் வளர்ச்சி தமிழ்நாட்டின் வளர்ச்சியும், மக்களின் வளர்ச்சியுமே தனது குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வருகின்ற நம் கழகத்தலைவர் தளபதியார் அவர்களின் உழைப்பால் தேர்தல் அறிக்கையில் கூறிய 505 வாக்குறுதிகளில் 95 சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளார்கள். தலைவர் அவர்கள் இரவு,பகல் பாராது கண் துஞ்சாத உழைப்பினால் தமிழக மக்கள் அனைவரும் முதலமைச்சர் அவர்களை எண்ணி பாராட்டி புகழ்ந்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் நிறைவேற்றபடுகின்ற மக்கள் நலத்திட்டங்களை பார்த்து மற்ற மாநிலங்களும் தங்கள் மாநிலங்களில் அந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்காக முயன்று வருகிறார்கள்.இதுபோன்று மாநிலங்களுக்கெல்லாம் முதல் மாநிலமாக இருந்து தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்ட மக்களின் குடிநீர் தேவைகளையும்,நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்களில் விவசாயம் செய்வதற்கு தாமிரபரணி ஆறு பூர்த்திசெய்து வருகிறது. தாமிரபரணி பாபநாசம் அணையில் இருந்து வடக்கு கோடைமேல் அழகியான் கால்வாய், திருநெல்வேலி கால்வாய் மற்றும் பாளையங்கால்வாய், தெற்கு கோடைமேல் அழகியான் கால்வாய், நதியுண்ணி கால்வாய் மற்றும் கன்னடியன் கால்வாய் ஆகிய கால்வாய்களில் ஒவ்வொரு வருடமும், ஜீன் 1ந்தேதி கார் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது வழக்கம்.இந்த கால்வாய்களில் வரும் தண்ணீரால் அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகிய தாலுகாக்களில் உள்ள ஆயிரக் கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களில் விவசாயம் நடைபெற்று, பல ஆயிரக்கணக்கான விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருகிறது.

### தண்ணீர் திறக்க ஆணையிட்ட முதல்வர்!

ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் கார் சாகுபடிக்கு பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப் படாததால் அந்த பகுதிகளில் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் கஷ்ட ஜீவனம் செய்து வந்தனர். கழக ஆட்சி அமைந்ததும் கார் சாகுபடிக்கு ஜீன் 1ம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று தாங்கள் கூறியதின் அடிப்படையில், கழக தேர்தல் வாக்குறுதியிலும் ஜீன் 1ம் தேதி தண்ணீர் திறக்கப் படும் என்று கூறப்பட்டதின்படி, சொன்னதை செய்வோம் செய்வதை சொல்வோம் என்ற தலைவர் கலைஞர் அவர்களின் கூற்றின்படி நெல்லை மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, தண்ணீர் திறக்கப்பட்டு, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் 85,000 ஏக்கர் விவசாய நிலங்களில் விவசாயம் செய்யப்பட்டு, விவசாயிகள் பலன் அடைந்தனர்.அதுபோல இந்த வருடம் கார் சாகுபடிக்கு வடக்கு கோடைமேல் அழகியான், தெற்கு கோடை மேல்அழகியான் கால்வாய், நதியுண்ணி கால்வாய், கன்னடியன் கால்வாய், திருநெல்வேலி மற்றும் பாளையம்கால்வாய் ஆகிய கால்வாய்களில் தண்ணீர் வருகின்ற ஜீன் 1ம் தேதி திறந்தால் கார் பருவ சாகுபடி செய்வதற்கு ஏற்றதாகும்.

ஆகவே, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மேற்கண்ட கால்வாய்களில் வருகின்ற ஜூன் 1ம் தேதியன்று கார் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதற்கு, முதலமைச்சர் தளபதியார் அவர்கள் ஆணையிட்டு, விவசாய பெருங்குடிமக்கள் தங்கள் விவசாய நிலங்களில் விவசாயம் செய்து,விவசாயிகளின் வாழ்வாதாரங்கள் மேம்பட்டு அவர்களின் குடும்பங்களில் மகிழ்ச்சியை நிலைநிறுத்திட இக்கூட்டம் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

திருநெல்வேலி மாவட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று விவசாயிகள் நலன் கருதி மே 1ம் தேதி விவசாயத்திற்கு பெருங்கால் மதகில் இருந்து 2700 ஏக்கர் முன் கார் சாகுபடி பருவத்திற்கு விவசாயம் செய்ய மணிமுத்தாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்க விவசாயிகளின் கோரிக்கையை திருநெல்வேலி கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் வேண்டுகோள் வைத்ததை ஏற்று தண்ணீர் திறக்க ஆணையிட்டு உதவிய முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறது.

### மதுரை பவள விழாவில் தவறாமல் பங்கேற்போம்!

கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் 03.05.2025 அன்று நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுபடி வருகின்ற ஜூன் மாதம் 1 ம் தேதி மதுரையில் நடைபெற உள்ள பவள விழா ஆண்டின் பொதுக்குழு கூட்டத்தில் நம் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் என பொதுக்குழு சிறப்பு தகுதி பெற்ற கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்க இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் சாதனைகளை விளக்கும் வகையில் திருநெல்வேலி கிழக்கு மாவட்டம் சார்பாக 15 பொதுக்கூட்டங்கள் நடத்திய ஒன்றிய,நகர நிர்வாகிகளை இக்கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

மேலும் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தின் ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள்,கழக தோழர்கள் கழக ஆட்சியின் நான்காண்டு சாதனைகளை திண்ணைப் பிரச்சாரம் மற்றும் தெருமுனை பிரச்சாரம் மூலம் தொடர்ச்சியாக கழக பணி செய்து வருவதற்கு மாவட்ட கழகம் பாராட்டையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

திருநெல்வேலிக்கு மேற்கு புறவழிச்சாலை, காயிதே மில்லத் நூலகம் மற்றும் நாங்குநேரி தாலுகாவில் 2 இடங்களில் சிப்காட் தொழில்பேட்டை அமைக்கவும், தொழில் வளர்ச்சியும், வேலைவாய்ப்புகளையும் பெற அறிவிப்புகளை வெளியிட்ட முதல்வர் அவர்களுக்கு மாவட்ட கழகம் சார்பில் இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் இன்று தமிழ்நாடு அனைத்து துறையிலும் முன்னிலையில் உள்ளது.மற்ற மாநிலங்களைவிட வளர்ச்சியில் வழிகாட்டியாக முன்னேறி வருவதை தடுக்கும் எண்ணத்தில் வெள்ள நிவாரண நிதி தரமறுப்பதும், கல்வி வளர்ச்சிக்கு சட்டப்படி தரவேண்டிய நிதியை தரமறுப்பதும், ரயில்வே திட்டங்களுக்கு பணம் ஏதும் ஒதுக்கீடு செய்யாமலும் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு சட்டப்படி தர வேண்டிய நிதியை தராமல் இருப்பதும், மொழி வளர்ச்சிக்கு ஒதுக்கீடு செய்யும் பணத்தில் பாரபட்சமாக தமிழ்மொழி வளர்ச்சிக்கு 8 கோடியும் இந்தி மொழி வளர்ச்சிக்கு 600 கோடிக்கு மேல் ஒதுக்கீடு செய்து தமிழ்மொழி வளர்ச்சியை தடுக்க நினைக்கும் ஒன்றிய அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதோடு அனைத்து துறையிலும் மற்ற மாநிலத்தைவிட வேகமாக முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கும் திராவிட முன்னேற்ற கழக அரசின் வளர்ச்சியை தடுக்கும் எண்ணத்தோடு ஜாதி,மத உணர்வு களை தூண்டி குழப்பத்தை ஏற்படுத்த முயல்வதும் மாற்றான் தாய் மனப்பாண்மையுடன் செயல்படும் பா.ஜ.க ஒன்றிய அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம், மறைந்த முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.கே. கோட்டையப்பன் அவர்கள் சகோதரரும், ஒருங்கிணைந்த பாளையங்கோட்டை ஒன்றிய கழக செயலாளராக கழகப்பணி ஆற்றியும்,நான்கு முறை சிவந்திபட்டி ஊராட்சி மன்ற தலைவராகவும், தற்போது பாளையங்கோட்டை தெற்கு ஒன்றிய கழக செயலாளரும், பாளையங்கோட்டை ஒன்றியக் குழு தலைவருமான கே.எஸ்.தங்க பாண்டியன் அவர்கள் மறைவு.

ஏர்வாடி பேரூர் நகரச் செயலாளர் அயூப்கான் அவர்களின் மாமியாரும் ஏர்வாடி பேரூராட்சி மன்ற தலைவர் தஸ்லீமா அவர்களின் தாயாரும் சுபைதா அவர்கள் மறைவு. திருமலை கொழுத்துபுரம் தி.மு.க. முன்னாள் கிளை கழக செயலாளர் உ.முருகத்தேவர் அவர்கள் மறைவு.

சேரன்மகாதேவி பேரூராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவரும், மாவட்ட பிரதிநிதியுமான பழனி அவர்கள் மறைவு.

வள்ளியூர் வடக்கு ஒன்றியம் தெற்கு வள்ளியூர் முன்னாள் கிளைக் கழக செயலாளர் முத்துராமலிங்கம் அவர்கள் மறைவு ஆகியோர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



தூத்துக்குடி மாவட்டம்,சாத்தான்குளம் அருகே உள்ள மீரான்குளம் கிராமத்தில், 17.05.2025 அன்று கோயம்புத்தூரிலிருந்து திருச்செந்தூர் அருகே உள்ள வெள்ளாளன்விளைக்கு சென்றுகொண்டிருந்த கார் ஒன்று நிலை தடுமாறி சாலையின் அருகில் இருந்த கிணற்றில் எதிர்பாராத விதமாக விழுந்ததில் ரவி கோயில்பிச்சை,ஹெச்சியா கிருபாகரன்,மோசஸ்,வசந்தா மற்றும் குழந்தை ஸ்டாலின் ஆகிய ஐந்து நபர்கள் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து, 18.05.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த அவர்களின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு கழக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் ஆறுதல் தெரிவித்தார்.உடன் நெல்லை மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப்,மாவட்ட ஆட்சியர் சுகுமார்,மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன்,மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதி பாலன் உள்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. தில்லைவில்லாளன்

**மே 20 (2008)**



திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர். திராவிட நாடு இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்.

அண்ணாவின் ‘சந்திரரோதயம்’, ‘சந்திரமோகன்’, ‘நீதிதேவன் மயக்கம்’ ஆகிய நாடகங்களில் அண்ணாவுடன் இணைந்து நடித்தவர்.

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டத்தின் போது கைதாகி சிறை சென்றவர்.


தலைவர் கலைஞர் அவர்கள், 1948ல் முரசொலி வார இதழில் இவரைத் தொடர்ந்து சிறுகதை, கட்டுரைகளை எழுத வைத்தார். தலைவர் கலைஞர் அவர்களிடம் தனிப்பாசம் கொண்டிருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மைனர் மோசஸ்

**மே 20 (1993)**



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு தீவிர அரசியலில் ஈடுபட்டு சென்னை நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

சென்னை மாநகர மேயர் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“சிரித்த முகம் – செம்மாந்த நோக்கு – சிங்கத்தின் நடை – உடையணிந்து காட்சி தந்தால் ஒரு ராஜகம்பீரம் – இத்தனைக்கும் மேலாக உள்ளமோ கள்ளமொன்றில்லாத் தூய்மையின் இருப்பிடம்! தும்பை மலர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இரங்கல் உரையில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**